6th April 1960]

THE HON. SRI R. VENKATARAMAN : நானும் அதைப் பார்த்தேன் அதுமாதிரித் தகவல் ஒன்றும் இல்லை. சர்க்காரில் என்ன என்ன அதிகாரிகள் இருக்கிறார்களோ, என்னென்ன நிபுணர்கள் இருக்கிறார்களோ, அவர்களைக் கொண்டு தேடிப் பார்த்தோம். ஆனால், அப்படிப்பட்ட தகவல் ஒன்றும் கிடைக்க வில்லை. ஆனால், ஒரு தவறு இருக்கலாம் என்று தோன்றுகிறது. "சேலம்" என்ற இடம் பல நாடுகளில், பல தேசங்களில் இருக்கின்றன. ஆகவே, அந்த பிரசாரத்திற்கு ஆதாரம் இல்லை.

Manpower and employment opportunities.

* 578 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. P. SARATHI) : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் (scheme on manpower and employment, வேலைவாய்ப்பு பற்றிய திட்டம் எந்த அளவில் செயல்படுகிறது ?

(ஆ) அதற்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) and (*b*) A statement [a] is placed on the table of the House.

SRI S. M. ANNAMALAI : சார், மேஜை மீது வைத்திருக்கும் அறிக்கையில் 1957, 1958, 1959 ஆண்டுகளில், ஏறத்தாழ 15 பர்சண்ட் பேர்களுக்கு மாத்திரமே வேலை தேடித் தந்திருக்கிறது. அவர்கள் தக்கபடி நல்ல முறையிலே வேலைசெய்ய சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN: எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் அவைகளால் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியாது. அது, வேலை தேடுபவர்களுக்கும் வேலை கொடுக்கும் தொழிற்கூடங்களுக்கும் தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கும் ஒரு ஸ்தாபனம். இப்பொழுது, எம்ப்ளாய்மெண்ட் மார்கெட் இன்பர்மேஷன் சேகரிப்பதால், எவ்வளவு தொழில்களுக்குத் தேவையிருக்கிறது, எந்தெந்தவிதமான பற்றாக்குறை யிருக்கிறது என்பதை எல்லாம் தெரிந்துகொண்டு மக்களுக்கு வேலை தேடி தருவதற்கும் பயிற்சி பெறுவதற்கும் உதவியாக இருக்கும் என்ற நோக்கத்தோடுதான் இவை செய்யப்படுகிறது.

SRI T. T. DANIEL : In order to facilitate registration, may I know whether the Government propose to introduce the postal system of registration and also increase the number of Employment Exchange mobile units ?

THE HON. SRI R. VENKATARAMAN : The subject came up for consideration in the State Advisory Board. The Government are now considering the question whether Postal registration can be permitted.

Betterment levy at Sathanur and Amaravathy ayacut.

* 579—*Q.* SRI P. U. SHANMUGAM : கனம் ரெவினியூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சாத்தனூர் திட்டத்தின் கீழ் பலனடையும் விவசாயிகளுக்கும், அமராவதி திட்டத்தின் கீழ் பலனடையும் விவசாயிகளுக்கும் இடையே வரி வசூலிக்கும் முறையில் ஏதேனும் வித்தியாசமுள்ளதா ?

(ஆ) அப்படியானால், காரணம் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) All the lands under the Amaravathi project are dry lands and the land revenue assessment collected is at the rate fixed at the

[a] Printed as Appendix on page 61 infra

last resettlement. Water-cess at rates ranging from Rs. 7.50 nP. to Rs. 20 is collected in addition, according to the crop raised. The question of revising the assessment will be taken up after the project has worked for a few years.

The ayacut under the Sathanur project consists both of wet and dry lands. For the wet lands, assessment has been fixed with reference to the rates of assessment under Class I sources in force in North Arcot district. For dry lands, water-cess of Rs. 15, Rs. 7-8-0 and Rs. 3-12-0 for the I, II and III crops respectively is levied.

SRI P. U. SHANMUGAM : சாத்தனூர் நீர் தேக்கத்திலுள்ள ஆயக்கட்டுகள் பெரும்பாலும் புஞ்சைகளாக இருக்கின்றன. அதன் காரணமாக அமராவதி நீர் தேக்கத்திலுள்ள ஆயக்கட்டுகளுக்குக் கொடுக்கப்படுகிற சலுகைகள் எல்லாவற்றையும் இதற்கும் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: நான் ஏற்கெனவே சொன்ன படி, அமராவதியில் இருக்கக்கூடியவைகள் எல்லாம் புஞ்சை நிலங்கள், சாத்தனூர் அணைக்கட்டிலுள்ள நிலங்கள் எல்லாம் நஞ்சை புஞ்சை ஆக இருக் கிறது. ஆகையினால் தான் அந்த ரேட்டு போடப்பட்டிருக்கிறது. அங்கே இருக்கக்கூடியது பின் தங்கிய பிராந்தியமாக இருப்பதால் அப்படி போடப் பட்டிருக்கிறது. ஆகையினால் அங்கே சாகுபடி செய்கின்றவர்களுக்கு கொஞ்சம் கஷ்டம் இருக்கிறது என்று கலெக்டர் அப்படி சிபாரிசு செய் திருக்கிறார். அதனால்தான் அங்கே முதல் வருஷத்திற்கு ஒரு ரேட்டும் அதற்கு அடுத்து வரும் வருஷங்களுக்கு கொஞ்சம் குறைவாகவும் போட் டிருக்கிறார். அந்த அடிப்படையில் phased programme என்று சொல்வார்கள். அந்தப் பிரகாரம் நான்கு வருஷங்களுக்கு அப்படி சிபாரிசு அனுப்பப்பட்டிருக்கிறது.

SRI K. R. NALLASIVAM : கேள்வி தாளில் பெட்டர்மெண்ட் வரி என்று போடப்பட்டிருக்கிறது. ஆனால் கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அபிவிருத்தி வரியைப்பற்றி சொல்லவில்லை. அதனால் எது சரி என்பது தெரியவில்லை. அவர் சொல்வது தண்ணீர் தீர்வை பற்றியா அல்லது அபிவிருத்தி வரியைப்பற்றியதுதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : கேள்வியில் என்ன சொல்லி இருக்கிறது என்றால்

" Whether different methods are adopted in collecting betterment levy from the agriculturists benefited by the Sathanur Project and the Amaravathi Project."

ஹெட்டிங்கில் இருப்பது வேறு கேள்வியில் இருப்பது நான் சொன்னதுதான்.

SRI A. GOVINDASAMY : சாத்தனூருக்குக்கீழ் உள்ள திருக்கோவிலூர் எல்லிஸ் கால்வாய்களில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு அதை அபி விருத்தி வரியில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதன் காரணம் என்ன என் பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : நான் பொதுவாகச் சொன்னேன். அமராவதி ப்ராஜெக்ட்டுக்கு ஒரு மாதிரி, சாத்தனூர் ப்ராஜெக்ட்டுக்கு ஒரு மாதிரியாகப் போடப்பட்டிருக்கிறது. ஆகவே அபிவிருத்தி சம்பந்தமாக கேட்பதாயிருந்தால் அதற்குத் தனி கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறேன்.

Poondy Reservoir.

* 580 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the City Corporation has expressed its fear to the Government that the water-supply to Poondy would be affected by